(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(9).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 ஜனவரி 01 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2021 மார்ச் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

44/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் கீழ் ஹதபிம அதிகாரசபை எனும் பெயரில் செயற்படும் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அந்நிறுவனத்தின் பிரதான பணிகள் யாவை என்பதையும்;

(iii) அந் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இயங்கும் கட்டிடத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) அக்கட்டிடத்திற்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

(v) கமத்தொழில் அமைச்சு இயங்கும் கட்டிடத்திலேயே இந் நிறுவனத்தையும் தாபிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

144/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்வரும் 5 வருடங்களுக்கு இலங்கைக்கான மின்சக்தியின் தேவைப்பாடு குறித்து எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கைக்கான மின்சக்தியின் தேவைப்பாடு குறித்த தகவல்களை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

175/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அவிசாவளை, கிழக்கு ஹேவாகம் கோரளையின் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் 24 கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்துள்ள சுமார் 115,000 வைப்பீட்டாளர்களுக்குரிய 95 கோடி ரூபாயிலான வைப்புப் பணம் மேற்படி வைப்பீட்டாளர்களுக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீள வழங்கப்படவில்லை என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைப்பீட்டுப் பணத்தை உரிய வைப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி வைப்புப் பணத்தை உரிய வைப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

237/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும்,—

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மிளகு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மிளகை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மிளகை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

269/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு டெப் கணினி (Tab) வழங்கும் வேலைத்திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத் திட்டம் யாது;

(ii) மேற்படி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரங்களை முன்வைத்துள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(vi) கேள்விப்பத்திர கோரலின்போது முன்வைக்கப்பட்டுள்ள விபரக் குறிப்பீடுகள் யாவை;

(vii) தற்போது குறிப்பிட்ட டெப் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா;

(viii) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும், உயர் தர வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் டெப் கணினிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

534/2020

கௌரவ ரோஹன பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான கிளைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி கிளைகள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கிளை வலையமைப்பினை அநுராதபுரம் மாவட்டத்தில் மேற்கொண்டும் விஸ்தரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

585/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) அவை நீண்டகாலமாக நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தோட்டங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள தொழிலாளர்களுக்கான பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகிய அனுகூலங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி தோட்டங்களின் பெயர்கள் மற்றும் அவை அமைந்துள்ள மாவட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே (ஆ) (i) இல் குறிப்பிடப்படும் தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தற்போது இயங்கிவரும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தொழிற்சாலைகளில் வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி தொழிற்சாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி தொழிற்சாலைகளை மீளத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

658/2020

கௌரவ சாந்த பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைந்துள்ள புகையிரத நிலையங்களை படிப்படியாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அளவ்வ புகையிரத நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(ii) அதன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அளவ்வ புகையிரத நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல வருட காலமாக தாமதமடைந்துள்ளன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

666/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் நகர மத்தியில் அமைந்திருந்த ஒரு தொன்மைமிக்க கட்டிடமே குருநாகல் நகரபிதாவால் தான்தோன்றித்தனமாக தகர்க்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தினால் குறிப்பிட்ட கட்டிடம் அமைந்திருந்த காணியில் தற்போது அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(ii) தகர்க்கப்பட்ட மேற்படி கட்டிடம் எந்த யுகத்திற்குரியது;

(iii) மேற்படி கட்டிடத்தின் வரலாற்றுப் பெறுமதி யாது;

(iv) மேற்படி கட்டிடத்தை புனரமைத்துப் பேணுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா;

(v) மேற்படி கட்டிடத்தைப் புனரமைப்பதற்குச் செலவாகும் நிதித்தொகை யாது;

(vi) மேற்படி நிதித்தொகையை செலவழிப்பதற்கு எதிர்பார்க்கும் நிதியம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

856/2020

கௌரவ நலின் பெர்னாந்து,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விற்பனைக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் வருடாந்தம் இலாபம் ஈட்டும் மற்றும் நட்டமடையும் கிளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி நட்டமடையும் கிளைகளை இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது;

(iv) மேற்படி நட்டமடையும் கிளைகளை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) ஆமெனில், அதற்கான காரணம் என்ன;

(vi) புதிய கிளைகளை ஆரம்பிக்கையில் வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் பின்பற்றப்படும் செயல்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

864/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராகவும் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குரிய அரச ஒசுசல மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரச ஒசுசல மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்கள் இருப்பின், அம்மாவட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகள் அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) 2015 தொடக்கம் 2019 வரை அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) (i) அரச ஒசுசல மருந்தகங்களுக்கு காலாவதியாகிய மருந்துகள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதியை உரிய வழங்குநர்களிடமிருந்து அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உரிய பெறுமதி அறவிடப்படாத வழங்குநர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

868/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை வடக்கு மற்றும் கந்தளாய் ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையானது ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக மேற்குறித்த கல்வி வலயங்களில் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) தற்போது கிழக்கு மாகாண சபை இயங்காத நிலையில் மேற்படி மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகள் நேரடியாக உரிய ஆளுநரின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

945/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "செய்கடமை கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம்" எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி நிதியத்தை நிருவகிக்கும் நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) மேற்படி நிதியத்தை நிருவகிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி என்பவை யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட நிதியத்தில் தற்போது காணப்படும் நிலுவை யாது;

(ii) கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேற்குறிப்பிட்ட நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள நன்மைகள் யாவை;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

947/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வலுக்கியாறு – அராலி – வேலணை – புங்குடுதீவு ஊடாக குறிகட்டுவான் வரை செல்லும் வீதியானது யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய பிரதான வீதியாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் நீளம் யாது;

(ii) மேற்படி வீதி இறுதியாக புனரமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு;

(iv) அதற்கான நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பிரதான போக்குவரத்துப் பாதையொன்றாக அமைந்துள்ள மேற்படி வீதி புனரமைப்புச் செய்யப்படாமையின் காரணமாக அப்பிரதேச மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி வீதி புனரமைப்புச் செய்யப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1108/2020

கௌரவ ஜே சீ. அலவத்துவல,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலகெதர, மாவத்தகம (மல்லவபிட்டிய) நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்கள் மற்றும் வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) அக்கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு அது திறந்து வைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 மார்ச் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

45/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படை, அரச நிறுவனங்களுக்கு விமானச் சேவை வழங்கியதன் பொருட்டு அறவிட வேண்டிய நிலுவைத் தொகை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அந்த அரச நிறுவங்கள் ஒவ்வொன்றினதும் பெயர், நிலுவைத் தொகை மற்றும் நிலுவையாக உள்ள காலம் என்பவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அந் நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக இலங்கை விமானப் படையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

194/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய விளையாட்டுச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் தகைமைகள் வெவ்வேறாக யாவை;

(iii) விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்காக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் சேவைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

238/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும்,—

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எதனோலின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி எதனோல் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி எதனோலை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு எதனோலை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

351/2020

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போட்டித் தன்மையுடன்கூடிய வெளிநாட்டு உற்பத்திகளை இறக்குமதி செய்வதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதனால் அவர்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்கு விற்பனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், அந்த முறையியல் யாது;

(iii) இன்றேல், முறையியலொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iv) ஆமெனில், மேற்படி முறையியல் தயாரிக்கப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

589/2020

கௌரவ வேலு குமார்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாநகர சபையில் பணியாற்றும் தொழிலாளர்கள் குடியமர்ந்துள்ள மஹய்யாவ கிராமமானது கண்டி மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமம் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) அச்சந்தர்ப்பத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது இக்கிராமத்தில் காணப்படும் பதிவு இலக்கத்தைக் கொண்ட மின்சார வசதியுடன்கூடிய வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி வீடுகளில் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த காலத்தில் மஹய்யாவ கிராமத்திற்கென புதிய வீடமைப்புத் திட்டமொன்று வடிவமைக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி வீட்டுத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துவாரா;

(iii) அத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

667/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) A-17 வீதியில் ஹேயஸ்ட் தேயிலைத் தொழிற்சாலையை அண்டியதாக கொன்கலவை நோக்கிச் செல்லும் வீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்யப்படுமா;

(ii) மேற்படி வீதியானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தானதா;

(iii) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவு;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமையளிப்பதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

865/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையானது நிரந்தர மற்றும் அமய அடிப்படையில் எத்தனையென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட நிரந்தர மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) 2015 முதல் 2019 வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ஏனைய அமைச்சுகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் உரிய அமைச்சுக்களிலிருந்து மீள்நிரப்பல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 98 ஊழியர்கள், 2015 பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு வேறு அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) அக்கொடுப்பனவுகள் மீள்நிரப்பல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1020/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச மற்றும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் பேணிவரப்படுகின்ற வர்த்தக நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கை முறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொருட்ளை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் வெளிப்படைத்தன்மை பேணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக முழுமையான கணக்காய்வு நடத்தப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 மார்ச் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

46/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து இன்றுவரை அவ்வேலைத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையானது ஒவ்வோர் பிரதேச செயலகப் பிரிவு ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக் குடும்பங்களை தெரிவு செய்யும் போது பின்பற்றிய நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

176/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி வீதியின் கொழும்பிலிருந்து மொரட்டுவை வரையிலான பகுதியில் காணப்படுகின்ற அதிக வீதி நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் கரையோரப் பாதையின் (Marine Drive) நிர்மாணப் பணிகள் கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெஹிவளை – வாசல வீதி வரை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவு;

(ii) அக்கருத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு;

(ii) மேற்கொண்டும் நட்டஈடு வழங்கப்பட எஞ்சியிருப்பின், அது எப்போது வழங்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

195/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை பிரதேசத்தில் காற்று வலு மின் உற்பத்தி நிலையமொன்று அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின்நிலையத்தினால் பிறப்பிக்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மின்நிலையத்தின் மின்மாற்றி செயலிழந்த திகதி மற்றும் அது திருத்தப்பட்ட திகதி ஆகியன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி மின்நிலையத்தை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

239/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும், —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பூடின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெள்ளைப் பூடு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வெள்ளைப் பூடை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வெள்ளைப் பூடை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

352/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ள சில ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் கூட மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மதுபானம் விற்பனை செய்வதற்காக ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை;

(ii) மேற்படி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல்களும் உணவகங்களும் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் போர்வையில் இலங்கை பூராகவும் பேணிச் செல்லப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாக மதுபாவனை அதிகரிப்பதனால் மதுபான விற்பனைக்காக உரிமங்கள் வழங்கப்படும் முறையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

535/2020

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான ஒவ்வொரு போகத்திலும் அநுராதபுரம் மாவட்டத்தில் பெறப்பட்டுள்ள நெல் அறுவடையினையும்;

(ii) மேற்படி நெல் அறுவடையிலிருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையினால் ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவினையும்;

தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அநுராதபுர மாவட்ட விவசாயிகளின் நெல் அறுவடையின் பெரும்பகுதியை நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

605/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், 2020/2021 பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக இரசாயனப் பசளை இலவசமாக வழங்கப்படுமா;

(ii) ஆமெனில், பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iii) நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iv) ஆமெனில், நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் ஒரு ஏக்கருக்கு ஒவ்வொரு பசளை வகைகளில் வழங்கப்படும் அளவானது வெவ்வேறாக யாது;

(v) மேலதிக பயிர்களை பயிரிடுவதற்காக ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் பசளையின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

659/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் நகரம், இலங்கையில் அமைந்துள்ள ஒரு முக்கியமான நகரம் என்பதையும்;

(ii) இந்நகரம் ஒரு முறையியலுக்கமைவாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் நகரை ஒரு முறையியலுக்கு அமைவாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று இன்றளவில் தயார் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நிதி திரட்டப்படும் மூலங்கள் யாவை;

(iv) குருநாகல் நகரின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

723/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரையில் தீயணைப்புப் பிரிவொன்று இன்மையால் எதிர்பாராத தீ விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் உயிர் மற்றும் சொத்துச் சேதங்கள் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மன்னார் நகர சபைக்கும் முல்லைத்தீவு கரைத்துறைபற்று பிரதேச சபைக்கும் தீயணைப்புப் பிரிவுகளை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்திருந்த போதிலும், இதுவரை அவை வழங்கப்படவில்லையென்பதையும்;

(iii) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தீ விபத்து இடம்பெறும் சந்தர்ப்பங்களில் வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனம் வரவேண்டியிருப்பதுடன் இதற்கு சுமார் 1½ மணித்தியாலங்கள் செல்லுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கென தீயணைப்புப் பிரிவுகள் பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/2020

கௌரவ ஜகத் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் பேருந்துகள், புகையிரதங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் முதலிய போக்குவரத்து ஊடகங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையின் தற்போதைய போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக தேவைப்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடந்துநர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தலங்கம டிப்போவினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதன் பொருட்டு சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உட்பட போதிய பணியாட்டொகுதியினர் உள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவ்வெண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) இன்றேல், போக்குவரத்து சேவை இடம்பெறும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

869/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குறிஞ்சாக்கேணி பாலம் 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சேதமடைந்ததுடன் அன்றிலிருந்து இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தற்காலிக பாலமொன்றினைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கோரப்பட்டதுடன் அதன் பின்னர் அப்போதிருந்த பிரதமரால் அப்பாலத்தினை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தினை நிர்மாணிப்பதற்கான கேள்வி மனு ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நபரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

938/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் கொழும்பு கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுசமயவர்தன வித்தியாலயம், புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், மகாபோதி வித்தியாலயம், அனுருத்த மகளிர் வித்தியாலயம், புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம் (ஆரம்ப பிரிவு), முத்துவெல்ல இந்து வித்தியாலயம் மற்றும் கொ/முகத்துவாரம் ஆனந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அப்பணிக்காக கடந்த அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு - 12, ஹமீத் அல் ஹுசைனி வித்தியாலயத்தில் கட்டிடமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

948/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின், பிரதேச சபை அதிகாரப் பிரதேசமொன்றான நெடுந்தீவின் பிரதான போக்குவரத்துப் பாதையாக கடல்வழிப்பாதை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் இயங்கி வருகின்ற ‘நெடுந்தாரகை’ எனும் பயணிகள் போக்குவரத்துப் படகில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பதவி, நியமனத் திகதி மற்றும் சேவை அடிப்படை என்பன தனித்தனியே யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் யாரால் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) வில்லியம் ஜேசுதாசன் அன்ரனி ராஜ், சிந்தாகுலம் மெல்கியாஸ் மிலன், அல்பிரட் மரியதயாளன், அன்ரனி அமலதாஸ், அன்ரூஸ் ரகீம்லயோன் ஆகிய அலுவலர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1017/2020

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் 'ஐ- ரோட்' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் மேற்குறித்த கருத்திட்டத்தின் மூலம் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(ii) மேற்படி வீதிகளில் இன்றளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் உடைமைக்கு கையளிக்கப்பட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

என்னவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1109/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், பெல்லன்தெனிய பிரதேசத்தில் நடாத்திச்செல்லப்படுகின்ற இயோன் லங்கா நிதி நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா;

(ii) அந்நிறுவனத்தில் வைப்புச் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்ற படை வீரர்கள் என்பதை அறிவாரா ;

(iii) அந்நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) அவ்வைப்பாளர்களின் வைப்புத் தொகையை மீளவும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?